GWOP :30/2023 C/w 31/2023

நாள் : 06.03.2025

ம.சா. : 1

பெயர் : முகம்மது ஷெரிப்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் வெளிநாட்டில் இருந்த காலகட்டத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் நிர்வகிக்க என் தாயார் பெயரில் பவர் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த சொத்துக்கள் அனைத்தும் என் பெயரில் தான் வாங்கப்பட்டது என்றால் சரி. என் மனைவி பெயரில் எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் சரி. காரைக்காலில் இருந்து வக்கீல் நோட்டீஸ் அனுப்பியவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர் பெயர் கௌதுல் ஜனதுல் பிர்தோஷ் என்றால் நோட்டீஸில் அப்படி தான் போட்டிருந்தது. என் வழக்கறிஞர் மூலம் அந்த அம்மாவிற்கு பதில் அனுப்பினேன் என்றால் இல்லை. வக்கீல் அன்சாரிக்கு அனுப்பினேன். கௌதுல் ஜனதுல் பிர்தோஷ் என்பவருக்கு நான் தனியாக எந்த நோட்டீஸ்ம் அனுப்பவில்லை. என்னிடம் காட்டப்படும் நோட்டீஸ் நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய நோட்டீஸா என்றால் நான் அப்போது அந்தமானில் இருந்ததால் வழக்கறிஞரிடம் தகவல் சொல்லி அவர் நோட்டீஸ் அனுப்பினார் அந்த நோட்டீஸ் இதுதானா என்று எனக்கு தெரியவில்லை. நான் நேரடியாக கௌதுல் ஜனதுல் பிர்தோஷ் என்பவருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறேன் என்றாலும் வழக்கிற்காக இந்த நோட்டீஸ் அது தானா என்று தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அப்துல்லா என்ற நாகப்பட்டினம் வழக்கறிஞர் மூலம் அகமது அன்சாரி என்ற வழக்கறிஞருக்கு நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அப்துல்லா

வழக்கறிஞர் அகமது அன்சாரி என்ற வழக்கறிஞருக்கு அனுப்பிய நோட்டீஸில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தானே என்றால் ஆமாம் ஆனால் அது மார்பிங் செய்து எடுக்கப்பட்டுள்ளது. அதுபோல் நான் எந்த பொண்ணுடன் சேர்ந்து போட்டோ எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் இரண்டாவது போட்டோவில் உள்ளது நான் தானே என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் முன்றாவது போட்டோவில் உள்ளது நான் தானே என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நான்காவது போட்டோவில் உள்ளது நான் தானே என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஐந்தாவது போட்டோவில் உள்ளது நான் தானே என்றால் இல்லை. அந்த போட்டோக்களில் உள்ளது நானும் கௌதுல் ஜனதுல் பிர்தோஷ் என்ற பெண்ணும் என்றாலும் வழக்கிற்காக உண்மையை மறைத்து அது நான் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் காரைக்காலில் நான் வாங்கி சொத்திற்குண்டான ஆவணமா என்றால் ஆமாம். **அது எ.ம.சா. 3** ஆகும். அந்த சொத்தை எதிர்மனுதாரர் என் மீது DVC வழக்கு போட்ட பிறகு என் தாயார் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டேன் என்றாலும் அதற்கான சான்றிட்ட நகல் தான் இது என்றால் அந்த செட்டில்மென்ட் 31.03.2022 அன்று எழுதிக்கொடுத்துள்ளேன். அது DVC போட்டபிறகா என்று தெரியவில்லை. அதன் சான்றிட்ட நகல் **எ.ம.சா 4** ஆகும். DVC நோட்டீஸ் வாங்கியபிறகு அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக என் தாயாருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. DVC.No. 4/2022 என்ற வழக்கில் எதிர்மனுதாரர் தான் குடியிருக்கும் ஆயப்பாடி

புதுமனைத்தெருவில் உள்ள வீட்டில் இருந்து தன்னை வெளியேற்றக்கூடாது என்று Crlmp. 989/2022 என்ற மனுவில் உத்தரவு பெற்றார் என்றால் சரியல்ல. அவரை அந்த வீட்டில் இருந்து நான் வெளியேற்ற முயற்சிப்பதாக காவல் நிலையத்தில் எதிர்மனுதார் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஆயப்பாடி புதுமனைத்தெருவில் உள்ள வீட்டில் குடியிருக்கவில்லை பள்ளிவாசல் தெருவில் உள்ள வீட்டில் தான் குடியிருக்கிறார். அப்படி உத்தரவு பெற்றது எனக்கு தெரியாது. அந்த DVC வழக்கில் அந்த வீடு என்னுடையது இல்லை என்று காட்ட ஆயப்பாடி புதுமனைத்தெருவில் உள்ள வீட்டை எனது ஒன்று விட்ட சகோதரர் வக்பு மரைக்காயர் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்ததாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கிரயப்பத்திரம் உண்மையானது. அந்த ஆவணம் எழுதிக்கொடுத்தபோது எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கோர்டில் எந்த பிரச்சனையும் இல்லை. அந்த கிரயப்பத்திரம் நான் எழுதிக்கொடுத்தது தான் அதன் சான்றிட்ட நகல் **எமசா 5** ஆகும். அந்த ஆவணத்தில் ஜீவனாம்ச வழக்குகள் போன்றவைகளோ அல்லது வேறு எவ்வித வில்லங்கங்களோ இருப்பின் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு என் குழந்தைகளுக்கு அந்த சொத்தில் உரிமை ஏற்படக்கூடாது என்பதற்காகவும் ஜீவனாம்சம் கொடுக்ககூடாது என்பதற்காகவும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அந்த ஆவணத்தை பெயரளவில் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், என் இரண்டு குழந்தைகளுக்கும் மாதம் 10 ஆயிரம் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும் என்று DVC 4/2022, in CrlmP.

980/2022 என்ற மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரி. அந்த உத்தரவுப்படி இதுநாள் வரை நான் ஒரு ரூபாய் கூட ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்று அவர் அந்த ஜீவனாம்ச வழக்கில் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அந்த உத்தரவுப்படி இதுவரை ஜீவனாம்சம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஸ்கூல் பீஸ் நான் தான் கட்டுகிறேன். அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. ரசீது என்னிடம் இல்லை. நான் ஸ்கூல் பீஸ் பாசில் என்பவர் மூலம் தான் கட்டுவேன். அவர் எதிர்மனுதாரரின் மாமா மகன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பாசில் வெளிநாட்டில் இருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் ஒன்றரை வருடத்திற்கு முன்பு தான் வெளிநாட்டிற்கு போனார். அதுவரை அவர் மூலம் தான் கட்டினேன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள 10033 என்று முடியக்கூடிய வங்கி கணக்கு எண் என்னுடையது என்றால் சரி. எனக்கு வைசாலி என்று யாரையாவது தெரியுமா என்றால் தெரியாது. என் அந்த வங்கி கணக்கு மூலம் வைசாலி என்பவருக்கு 07.11.2019 ல் ரூபாய் 2 லட்சமும், 12.11.2019 அன்று ரூபாய் 1,20,000/-ம் காசோலை மூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரி. அறிவாஹன் என்பவர் குவைத்தில் HR ஏஜென்ஸி வைத்திருந்தார். அவர் வீட்டுக்கஷ்டத்தினால் அந்த அக்கவுண்டில் பணம் போடசொன்னார் அதனால் போட்டேன். மேற்படி பரிவர்த்தனைக்கான பேங்க் பாஸ்புக்கின் ஒரு பக்கத்தின் ஜெராக்ஸ் **எமசா.6** ஆகும். நான் சொல்வது பொய் என்றாலும் அந்த பெண்ணுடனும் எனக்கு தவறான தொடர்பு இருந்தது என்றாலும் அந்த தொடர்பை துண்டிக்க பணம் கொடுத்து செட்டில் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அது பொய். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இன்ஸ்டாகிராமில் கல்லூரி பெண்களிடம் தவறாக

நடந்து கொள்வேன் என்றும், என்னிடம் கவனமாக இருக்க வேண்டுமென்று ஒரு பதிவு வந்தது என்றாலும் அதற்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன் என்றால் தவறு. காரைக்காலை சேர்ந்த ஜீனத் என்ற பெண்ணை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த பெண்ணை நான் திருமணம் செய்து கொண்டதாக எதிர்மனுதாரர் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் இல்லை. எனக்கு அதுபோல் காவல் நிலையத்தில் இருந்த விசாரணைக்கு எந்த அழைப்பும் வரவில்லை. எனக்கும் ஜீனத் என்பவருக்கும் 14.11.2024 அன்று சஃபியா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்றால் சரியல்ல. அதுபோல் அந்த பெண்ணுடன் திருமணமே நடக்கவில்லை. குழந்தை எப்படி பிறக்கும். செயின்ட் ராக்ஸ் கியுனி மருத்துவமனை புதுத்துறை காரைக்கால் என்ற மருத்துவமனையில் 12.11.2024 அன்று டெலிவரிக்காக அட்மிஷன் போட்டபோது என் பெயரான முகமது ஷெரிப் என்று கணவர் பெயர் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல வழக்கிற்காக சொல்லப்படும் பொய். பிறப்பு சான்றிதழில் என்னுடைய பெயர் வரக்கூடாது என்பதற்காக என்னுடைய ஆதாரை கொடுக்காமல் மருத்துவமனை நிர்வாகிகளை மிரட்டி விட்டு வந்தேன் என்றால் சரியல்ல. அந்த குழந்தை யாருடையது என்று கண்டறிய DNA Test எடுத்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லையே என்றால் இல்லை. அதன் காரணமாக தகப்பனார் பெயர் குறிப்பிடாமல் பிறப்பு சான்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நகராட்சி அலுவலகத்திற்கு சென்று நான் ஒரு வழக்கறிஞர் என்று பொய் சொல்லி மிரட்டி பிறப்பு சான்றிதழ் நகல் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காரைக்காலில் தான் இருக்கிறேன் என்றாலும் ஊரில் இருப்பதில்லை என்று வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஜீனத்துல் அமீனா என்ற பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல பொய். எதிர்மனுதாரர் லாக்கரில் இருந்த நகைகளை எடுத்து சென்று விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் தாயார் தான் லாக்கரில் இருந்து எதிர்மனுதாரரின் நகைகளையும் எடுத்து சென்று என்னிடம் கொடுத்திருக்கிறார் என்றாலும் அதை நான் வைத்துக்கொண்டு தற்போது எதிர்மனுதாரரிடம் தர மறுக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிர்மனுதாரர் அதுபோல் லாக்கரில் இருந்து நகை எடுத்து சென்றிருந்தால் எவ்வளவு நகை என்பதை குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் அப்படி எடுத்து போகாகததால் தான் நகையின் எடையை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 22.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் எதிர்மனுதாரர் தனக்கு பல் வலிப்பதாக என் அம்மாவிடம் சொல்லிவிட்டு வெளியில் போயிருக்கிறார். நான் அப்போது வெளியூரில் இருந்தேன். பொறையார் பஸ் ஸ்டாண்டு அருகில் எதிர்மனுதாரரின் மாமா பல் கிளினிக் வைத்திருக்கிறார் அங்கு எதிர்மனுதாரரின் அம்மாவை உட்காரவைத்து விட்டு எதிர்மனுதாரரின்அப்பா தான் வீட்டிற்கு வந்து எதிர்மனுதாரரை அழைத்து போனார். அதன்பிறகு எதிர்மனுதாரரும்அவரது அம்மாவும் IOB பேங்கிற்கு போய் அங்கு என் அம்மா பெயரிலும் எதிர் மனுதாரர் பெயரிலும் லாக்கர் எடுத்து வைத்திருந்தேன் ஜாயின்ட் அக்கவுண்டும் இருந்தது. எதிர்மனுதாரரும் அவரது அம்மாவும் சேர்ந்து 10 ம் நம்பர் லாக்கரில் இருந்து நகையை எடுத்து போய்விட்டார்கள். இது பற்றி வங்கியிலிருந்து போன்செய்து என் அம்மாவிடம் தகவல் சொன்னார்கள். மேற்படி விவரங்களை என் மனுவிலோ, முதல் விசாரணை அபிடவிட்டிலோ சொல்லவில்லை என்றால் சரி. என் மீதுள்ள தவறை மறைப்பதற்காக

பொய்யாக பின்னிட்டு மேற்படி தகவலை கூறுகிறேன் என்றால் சரியல்ல. லாக்கருக்கு பேங்கில் ஒரு சாவி தான் கொடுப்பார்கள் என்றால் சரி. ஆயப்பாடி, புதுமனைத்தெருவில் உள்ள வீட்டை காலி செய்து தரச்சொல்லி வாக்பு மரைக்காயர் ஏஜென்ட் முகமது சிராஜீதின் மூலமாக சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரின் சகோதரர் முகமது ரியாஸ் மீது அசல் வழக்கு 286/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கும் என் தூண்டுதலின்பேரில் தான் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வாக்பு மரைக்காயர் உன் குடும்ப பிரச்சனையில் என்னை இழுத்துவிட்டு விட்டாய் என்று சொன்னதால் நான் அந்த வழக்கை பார்த்துக்கொள்கிறேன்என்று சொல்லி எனக்கு வேண்டப்பட்ட முகமது சிராஜீனை பவர் ஏஜென்டாக காட்டி அந்த வழக்கை நான் தான் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. குழந்தைகளுக்கு ஸ்கூல் பீஸ் எந்தெந்த தேதியில் எவ்வளவும் பணம் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. அதுபோல் எந்த ஸ்கூல் பீஸ்ம் கட்டவில்லை என்றாலும் அதனால் தான் நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எதிர்மனுதாரர் என்னிடம் குழந்தையை விட்டுவிட்டு செல்லவில்லை என்றாலும் அப்படி விட்டுவிட்டு போனதாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01.07.2021 அன்று எதிர்மனுதாரரும் அவரது உறவினர்களும் சேர்ந்து குழந்தையை என்னிடமிருந்து அபகரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடிக்கடி தரக்குறைவாக பேசியதாகவும் குழந்தைகளை என்னிடம் விட்டு விட்டு அடிக்கடி தனது தாய் வீட்டிற்கு போனதாகவும் மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உடல்நலம் குன்றி தாம்பத்திய

வாழ்க்கையில் ஈடுபட முடியாமல் போனதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் பொய் என்பதால் தான் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் குழந்தைகளை பராமரிப்பதற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை பொருளுதவியும் செய்யவில்லை என்றாலும் சமூகத்தில் என்னை நல்லவனாக காண்பிப்பதற்காக எனக்கு ஏற்பட்ட அவப்பெயரை நீக்குவதற்காக பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தைகள் நல்ல முறையில் வளர வேண்டும் என்று நினைத்திருந்தால் நீதிமன்றம் உத்தரவிட்ட ஜீவனாம்ச தொகையை கொடுத்திருப்பேன் என்றாலும் எனக்கு அந்த அக்கறை இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது நகையை திருப்பி கேட்டு DVC 4/2022 மனுவில் இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அந்த மனுவில் இருந்து தப்பிப்பதற்காக 200 சவரன் நகையை எதிர்மனுதாரர் லாக்கரில் இருந்து எடுத்து சென்று விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01.07.2021 அன்று எதிர்மனுதாரர் குழந்தையை வீட்டில் இருந்த எடுத்து சென்றது சம்பந்தமாக நான் பொறையார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக குழந்தை எனக்கு வேண்டுமென்றால் நகை பற்றியோ, பணம் பற்றியோ கணக்கு கேட்க கூடாது என்று எதிர்மனுதாரர் நிபந்தனை விதித்ததாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தைகள் என்னிடம் வளர்ந்தால் சமுதாயத்தில் கௌரவமாக வளர முடியாது என்றாலும் எதிர்மனுதாரரிடம் இருந்தால் தான் நல்லபடியாக வளர்வார் என்றால்

சரியல்ல. குழந்தை பிறந்தது முதல் 01.07.2021 வரை என்னிடம் தான் குழந்தைகள் இருந்தது நான் தான் குழந்தைகளை பராமரித்தேன் படிக்க வைத்தேன். குழந்தையை பள்ளியில் சேர்ப்பதற்கு கூட அக்கறையில்லாததால் நான் பள்ளிக்கு போகவில்லை என்றாலும் எதிர்மனுதாரர் தான் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தார் என்றால் சரியல்ல. நான் தான் சேர்த்தேன். பள்ளி ஆவணங்களை பார்த்தால் மேற்படி விவரம் தெரியும் என்றால் சரி. இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றாலும் குழந்தைகள் என்னிடம் வளர்ந்தால் நல்ல முறையில் வளராது என்றாலும் சரியல்ல. குழந்தைகளையும் எதிர்மனுதாரரரையும் கொடுமை படுத்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பல பெண்களுடன் தொடர்பு இருக்கும் விஷயம் எதிர்மனுதாரர் மூலம் சமுதாயத்திற்கு தெரியவந்ததால் எதிர்மனுதாரரை பழிவாங்குவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனு நிலுவையில் இருக்கும்போதும் நீதிமன்றம் மூலம் எந்த தொகையும் குழந்தைகளுக்காக கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் கொடுக்கவில்லை. நல்லநோக்கத்துடன் மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சியம் அளிக்கப்பட்டு என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

6/3/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை.

06/3/25